(6) Summer Institute in Physics for school teachers at St. Joseph's College, Tiruchirappalli;

(7) Summer Institute in Chemistry for school teachers at Pachaiyappa's College, Madras;

(8) Summer Institute in Biology for school teachers at Jamal Mohammed College, Tiruchirappalli; and

(9) Summer Institute in Physics for school teachers at the Madras Christian College, Tambaram.

மேற்கண்ட கோடை கால பயிற்சி நிலையங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழக மானியக் குழுவினுல் 1971-72-ம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்குமுத்து தேவர் அவர்கள் முதலில் கேட்ட கேள்வியைப் பொறுத்த வரையில், பள்ளி ஆசிரியர்களுக்கும் சேர்த்து இந்தப் பயிற்சி வகுப்பு மேற்கண்ட ஒரு சில இடங்களில் நடத்தி வருகிருர்கள் என்று குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether when such summer schools are conducted the same teachers will be appointed or specialists appointed and paid specially?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வேலை பார்த்து வருகின்ற ஆசிரியர்களுக்குத்தான் மேலும் பயிற்சி அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே வேலையில் இருக்கிறவர்களுக்குத்தான் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அறிஞர் அண்ணு கலைக்கல்லூரி மாணவிகள் வேலை நிறுத்தம்

* 49. வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 12-7-71 அன்று வாலாஜா அறிஞர் அண்ணு கலைக்கல்லூரியில் மாணவிகள் வேலை நிறுத்தம் செய்தனரா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) விடுதித் துணைக் காப்பாளரின் மாற்றுதலை எதிர்த்து விடுதி மாணவிகள் வகுப்புக்குச் செல்ல மறுத்தனர். விடுதித் துணைக் காப்பாளர் பதவி உயர்வில் மாற்றுதலாகியுள்ளார் என்பது மாணவிகளுக்கு விளக்கப்பட்ட பின் அவர்கள் அமைதியாக வகுப்புக்குச் சென்றனர்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படி பெண்கள் கல்லூரிகளிலும் வேலை நிறுத்தம் செய்கின்ற பழக்கம் வந்துவிட்டதன் காரணமாக சிறுசிறு காரணங்களுக்கெல்லாம் இப்பொழுது வேலை நிறுத்தம் என்று வருகின்ற நிலையைப் போக்குவதற்கும் கல்லூரிகளில் அமைதி, ஒழுக்கம் ஆகியவை நிலவ வேண்டும் என்பதைக் கருதியும் மாணவ மாணவியர் இனிமேல் ஸ்ட்ரைக் செய்யக்கூடாது என்று சட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றல்ல இது. ஆகவே, கல்லூரி முதல்வரும் மற்றவர்களும் மாணவ மாணவியர்களுக்கு நிலைமைகளை எடுத்து விளக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அது வேலை நிறுத்தம் அல்ல. ஆசிரியர்கள் செய்தால் அது வேலை நிறுத்தம்; மாணவ மாணவியர் செய்தால் அது படிப்பு நிறுத்தமே தவிர, வேலை நிறுத்தம் ஆகாது. படிப்பு நிறுத்தத்தின் மூலம் ஏற்படும் கேட்டை அவர்களுக்கு உணர்த்த வேண்டியதில்லை. அதிலுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அதில் தெளிவு ஏற்படச் செய்ய ஒரு குழு அமைப்பது நலம் தரும். கல்லூரியிலிருக்கும் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவியருடைய பிரதிநிதிகள் மூவர் இருந்து இந்தப் பிரச்சினையை முதலில் ஆராய்ந்து அங்கேயே தீர்க்கப்படும் சூழ்நிலை ஒவ்வொரு கல்லூரிக்கும் ஏற்படவேண்டும் என்ற முறை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கும் மீறி வந்தால் அதற்குப் பிறகு கவனித்துக்கொள்ளலாம்.

இந்தக் கல்லூரியைப் பொறுத்த வரையில் ஒரு தமிழ் ட்யூடர் விடுதித் துணைக் காப்பாளராக இருந்தார். ட்யூடராக இருந்தவர், அஸிஸ்டென்ட் ப்ரொஃபஸராகி, அஸிஸ்டென்ட் ப்ரொபஸர் வேலையினை—வேலை உயர்வின் காரணமாக—ஏற்றுக்கொள்ளச் சென்ற நிலையில், அதைப் புரிந்துகொள்ளாத காரணத்தால், அவரை வேண்டுமென்றே மாற்றிவிட்டார்கள் என்று நினைத்து, மாணவிகள் காலை நேரத்தில் படிப்பு நிறுத்தம் செய்தார்கள். பிறகு, கல்லூரி முதல்வர் போய் விளக்கம் தந்தார். அதன்பின் மாலையில் மாணவிகள் வகுப்புக்கு வந்துவிட்டார்கள். ஆனால், அப்படிப்பட்ட நிலை ஏற்படுவது வருந்தத்தக்கதுதான். அதைத் தவிர்க்க எல்லா வகையிலும் முயற்சி எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சட்டம் செய்வதன்மூலம் அதைத் தவிர்க்க முடியாது.

நகராட்சிகளில் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு தனி இடங்கள்

* 50. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மாண்பாண்டத் தொழிலாளர்கள் ஆகிய மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு நகராட்சித் தேர்தல்களில் தனி இடங்கள் ஒதுக்கித்தர அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்போதுள்ள சட்ட விதி முறைகளில் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு நகராட்சித் தேர்தல்களில் தனி இடங்கள் ஒதுக்கித்தர வகை செய்யப்பட வில்லை.

Sanitary Inspectors in Municipalities

* 51 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether Senior Sanitory Inspectors are to be appointed as Health Officers in Municipalities ; and

(*b*) if so, the details thereof?